# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.12.08

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 17/2016 (i)**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஆளணியின் சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பான 2016.12.05 ஆம் திகதிய 17/2016 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

17/2016 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கைப் பிரகாரம், **2016 ஆம் ஆண்டிற்குரிய ஒத்திசைவான (இணையான) அடிப்படைச் சம்பளம் மற்றும் 2015.12.31 ஆம் திகதிக்குரிய அடிப்படைச் சம்பளம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டிற்கு இணையான அடிப்படையில்** பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) , ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) மற்றும் ஓய்வூதிய நிதியத்திற்கு 2016.01.01 முதல் 2016.11.30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்கான தொகையை கணக்கிடும்போது கீழ் குறிப்பிடப்படும் வழி முறையைப் பின்பற்றல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

1) **தற்போது பணியாற்றும் ஊழியர்களுக்கான பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) , ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF)**

அ) **பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF)** - ஓய்வூதிய நிதியத்தை தெரிவு செய்யாத ஊழியர்களாயின் தொழில் வழங்குனரின் பங்களிப்பான 15% அல்லது ஓய்வூதிய உரித்துடைய ஊழியர்களாயின் 7% கணக்கிடப்பட்டதன் பின்னர் 2016.01.01 முதல் 2016.11.30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்காக செலுத்த வேண்டிய மொத்தத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.

ஆ) 2016.01.01 முதல் 2016.11.30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய 10% ஆன ஊழியரின் மொத்த பங்களிப்புத் தொகையை குறிப்பிட்ட ஊழியரின் இணக்கப்பாட்டுடன் 2016 டிசம்பர் மாதம் முதல் ஆரம்பித்து உச்சளவு ஆறு (06) மாத காலத்தினுள் குறிப்பிட்ட ஊழியரின் சம்பளத்திலிருந்து அறவிட்டுக்கொள்ளல் வேண்டும்.

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தினால் தீர்மானிக்கும் பிரகாரம் ஏற்றுக்கொள்ள முடியுமான பிறிதொரு பொறிமுறையின் ஊடாக.

இ) **ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) - 03%** பங்களிப்புத் தொகையை கணக்கிட்டதன் பின்னர் 2016.01.01 முதல் 2016.11.30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்காக செலுத்த வேண்டிய மொத்தத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.

**2) ஓய்வு பெற்ற / இராஜினாமா செய்த/ பதவியை விட்டுச் சென்ற ஊழியர்களுக்கான பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) , ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF)**

அ) **பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) - ஓய்வூதிய நிதியத்தை தெரிவு செய்யாத ஊழியர்களாயின்** தொழில் வழங்குனரின் பங்களிப்பான 15% கணக்கிடப்பட்டதன் பின்னர் (10% ஊழியரின் பங்களிப்புத் தொகையை அறவிட முடியாதிருப்பதனால்) 2016.01.01 முதல் தொழில் புரிந்த காலம் வரைக்கான முழுத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக குறிப்பிட்ட ஊழியர்களுக்குச் செலுத்தல் வேண்டும்.

ஆ) **பல்கலைக்கழக சேமலாப நிதியம் (UPF) - ஓய்வூதிய நிதியத்துடன் சம்பந்தப்பட்ட ஊழியர்களாயின்** -

தொழில் வழங்குனரின் பங்களிப்பான 07 % கணக்கிடப்பட்டதன் பின்னர் (10% ஊழியரின் பங்களிப்புத் தொகையை அறவிட முடியாதிருப்பதனால்) 2016.01.01 முதல் தொழில் புரிந்த காலம் வரைக்கான முழுத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக குறிப்பிட்ட ஊழியர்களுக்குச் செலுத்தல் வேண்டும்.

இ) **ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) - 03%** பங்களிப்புத் தொகையை கணக்கிட்டதன் பின்னர் 2016.01.01 முதல் மேற் குறிப்பிடப்பட்ட ஊழியர்களின் [(அ) மற்றும் (ஆ) பிரிவு) ] பணி நிறுத்தப்பட்ட திகதி முதல் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.

**3) ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்பு**

அ) **தற்போது பணியாற்றும் ஊழியர்களுக்காக**

ஊழியர்கள் தற்போது பணியாற்றிக் கொண்டிருப்பதுடன் அவர்கள் ஓய்வூதிய நிதியத்தில் இணைந்திருப்பவர்களாயின் தொழில் வழங்குனரின் பங்களிப்பான 8% கணக்கிடப்பட்டதன் பின்னர் 2016.01.01 முதல் 2016.11.30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்காக செலுத்த வேண்டிய மொத்தத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக ஓய்வூதிய நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும்.

ஆ) **<u>ஓய்வு பெற்றிருக்கும் ஊழியர்களுக்காக (ஓய்வூதியத்திற்கு உரித்துடையவர்கள்)</u>**

ஓய்வூதியத்திற்கு உரித்துடைய ஊழியர்களாயின் தொழில் வழங்குனரின் பங்களிப்பான **8%** கணக்கிடப்பட்டதன் பின்னர் 2016.01.01 முதல் ஓய்வு பெற்ற திகதி வரையிலான காலப் பகுதிக்குரிய மொத்தத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக ஓய்வூதிய நிதியத்திற்கு வரவு வைத்தல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட ஊழியர்களின் மாதாந்த ஓய்வூதியத்தை ஏற்புடையதாகும் சுற்றறிக்கையின் பிரகாரம் சீர்படுத்தல் வேண்டும்.

இ) **<u>20 வருட கால சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் ஓய்வு பெற்ற / இராஜினாமா செய்த/ பதவியை விட்டுச் சென்ற ஊழியர்களுக்காக</u>**

20 வருட கால சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் ஓய்வு பெற்ற /இராஜினாமா செய்த/ பதவியை விட்டுச் சென்ற ஊழியர்களாயின் ஓய்வூதிய நிதியத்திற்கான தொழில் வழங்குனரின் பங்களிப்பான **8%** கணக்கிடப்பட்டதன் பின்னர் 2016.01.01 முதல் முதல் தொழில் முடிவுறுத்தப்பட்ட காலம் வரைக்கான முழுத் தொகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / குறிப்பிட்ட உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக குறிப்பிட்ட ஊழியர்களுக்குச் செலுத்தல் வேண்டும்.

இது தொடர்பாக மேலும் தெளிவுபடுத்தல் அவசியமாயின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் நிதிப் பிரிவின் சிரேஷ்ட உதவிக் கணக்காளரைத் தொடர்பு கொள்ளவும் - தொ.பே.இலக்கம் 011-2685511

தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம் : பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/9/86 (16th Volume)